செ.வெ.எண்:37 நாள்:18.08.2018

## கரூர் மாவட்டம்

## காவிரியில் உபரி நீர் அதிக அளவு வருவதால் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் மற்றும் கரூர், திருச்சி மாவட்ட ஆட்சியர்கள் மாயனூர் கதவணையில் கூட்டாய்வு மேற்கொண்டனர்

கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையிலிருந்து 2,28,394 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதால் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராஜாமணி,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (18.08.2018) மாயனூர் கதவணைப்பகுதியில் கூட்டாய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்ட மாயனூர் கதவணையின் வழியாக இன்று காலை நிலவரப்படி விநாடிக்கு 2,28,394 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதால் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணித்துறை, வருவாய்துறை, ஊரகவளர்ச்சித்துறை, காவல்துறை அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்து 24 மணிநேரமும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஷட்டர்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்து மண்சரிவு ஏற்படும் இடங்களில் மணல்மூடைகளை கொண்டு தடுக்கப்படுகிறது. மேலும் போதிய அளவு மணல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளிலுள்ள வீடுகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு அத்தியாவசிய தேவையான உணவு, பாய், போர்வை உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் 155 ஹெக்டேர் விளைநிலங்களும், திருச்சி மாவட்டத்தில் 450 ஹெக்டேர் விளைநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட வீடுகள், விவசாய நிலங்கள் ஆகியவற்றின் பாதிப்புகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நிவாரணம் பெற்று வழங்கப்படும்.

கடைமடை பகுதி வரை வாய்க்காலில் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழகத்திலுள்ள அனைத்து கால்வாய்கள், வரத்துவாரிகள் குடிமராமத்து திட்டத்தின் கீழ் தூர் வாரப்பட்டுள்ளதால் தண்ணீர் வேகமாக சென்று கொண்டிருக்கிறது. தென்கரை வாய்க்கால், புதிய கட்டளை வாய்க்கால்களின் கொள்ளளவு 400 முதல் 460

கனஅடியாகும். எனவே, அந்த அளவிலான நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்னும் ஓரிரு நாட்களில் திருச்சி மாவட்டத்திலுள்ள கடைமடை பகுதி வரை தண்ணீர் சென்று விடும். கரூர் மாவட்டத்தில் கடைமடை பகுதிகள் அனைத்திற்கும் தண்ணீர் சென்றுவிட்டது.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ப.குமார், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, முசிறி சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி எஸ்.கவிதா, காவிரி ஆற்று பாதுகாப்பு கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.பிரபாகரன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.லியாகத் (குளித்தலை) திரு.ரவிச்சந்திரன் (முசிறி), கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், திரு.காளியப்பன், திரு.பொறணிகணேசன், திரு.கண்ணதாசன், திரு.செல்வராஜ், திரு.கமலக்கண்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**